International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# தோட்டம் நாவலின் தலைமை மாந்தர்களின் பண்புநலன்கள்

**மு. புஷ்பா**
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல், கல்லூரி, காரிமங்கலம்

**முனைவர் செள. கீதா**
முதல்வர், அரசு மகளிர் கலைக்கல்லூரி, கிருட்டிணகிரி

## முன்னுரை

புதினங்களின் முக்கிய நிகழ்வில் பங்கேற்பவர்கள் கதையை நடத்திச் செல்வதில் பெரும்பங்கு வகிப்பவர்கள் தலைமைப் பாத்திரங்கள் ஆவர். தலைமைப் பண்பை, வாழ்வியலை விளக்குவதாக கதைக்களம் அமையும். தலைமை மாந்தர்கள் என்பவர் சமுதாயத்தில் காணப்பெறும் பல்வேறுபட்ட பண்புகளின் சின்னமாவர். அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் அத்தனை மனிதர்களுமே கதையில் பாத்திரங்களாக அமையும் தகுதி பெற்றவர்களாவர். புதின ஆசிரியர்கள் ஒரு பாத்திரத்தைப் படைக்க உண்மை மனிதர்களையே பெரும்பாலும் மாதிரியாகக் கொள்கின்றனர். இந்நாவலில் பரிமளா-கௌதம் ஆகியோர் தலைமைப் பாத்திரங்கள் வரிசையில் இடம்பெறுகின்றனர். இவர்களின் பண்புநலன் இக்கட்டுரையில் காண்போம்.

## தலைமைப் பாத்திரங்கள்

தலைமைப் பாத்திரங்கள் "கதைக் கருவிற்கு விளக்கம் தருபவர்களாக விளங்குவார்கள். கதை, முடிவு இப்பாத்திரங்கள் பற்றியதாக அமையும். படிப்போர் உள்ளத்தில் தம் வாழ்வில் கலந்த பாத்திரங்களைப் போன்று படிப்போர் குறிப்பிட்டு பேசுவர்" என்று பா.சம்பத்குமார் (மு.வ.நா.பா.ஓ.தி.ப. 54, 55) குறிப்பிடுகிறார். விந்தன் நாவலில் என்னுடைய புதின மாந்தர்கள் கற்பனையானவர்கள் அல்ல. அவர்களின் வாழ்க்கை தகவல் பற்றிய அடிப்படையில் அமைத்துள்ளேன் என்று விந்தன் கூறுவதாக (வி.நா.ஓ.ஆ.ப. 23) மு. பரமசிவம் கூறியுள்ளார்.

இப்பொருண்மையின் அடிப்படையிலேயே சேதுமணி மணியன் தலைமைப் பாத்திரங்களைப் படைத்துள்ளமையைக் காணமுடிகிறது. "தலைமைப் பாத்திரங்களை மையமிட்ட புதினத்தின் பொருளடக்கம் அமைந்திருக்கும் நிலையில் அப்பாத்திரங்களைப் பொதுநிலையில் நோக்கப் படுவதைவிட அவர்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் சிறப்பு நிலையில் ஆய்வுக்கு உரியவர்கள்" என்று ஹரி.விஜயலட்சுமி (ரா.இ.பு.பெ.ஓ.ஆ.ப. 44) கூறியுள்ளார்.

## பரிமளாவின் குணநலன்கள்

நம்பிக்கையின் துணிச்சல், கல்வி கற்பதற்கு தடை, உதவி செய்யும் மனப்பான்மை, திட்டமிடுதல், திறமை, அன்பாக இருத்தல், அறிவுரை வழங்குதல் போன்றவையாகும்.

## நம்பிக்கையின் துணிச்சல்

மனித மனங்களில் ஏற்படும் நம்பிக்கையின் பலவாறாக இருக்கின்றன. அவரவர் வளரும், பிறக்கும், வாழும் சூழல் மற்றும் சமூக சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து அமைகின்றன. ஒருவர் கொண்டுள்ள நம்பிக்கை இன்னொருவருக்கு மூடநம்பிக்கையாகவும் நம்பிக்கையே

International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

உண்மையான நிலையை மனித மனங்கள் காணப்படுகின்றன.

பரிமளா இயற்கையின் பேராற்றலை உள்வாங்கி மிகவும் சிறப்பாக வளர்ந்து வந்தவள். இவளின் சக்திகள் பலமானவை. ஒரு நாள் பரிமளா ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது யாரோ தொடுவது போல் ஓர் உணர்வு ஏற்பட்டது. அப்போது திடீரென்று விளக்கு வெளிச்சத்தில் பார்க்கும்போது காளியப்பன் தன் தவறாக நடந்து கொள்ள முயற்சி செய்திருக்கிறான். அவளுக்கு கோபம் உச்சியைத் தொட்டது. அவனை வீழ்த்த அவளால் முடியும். பரிமளா சிறுவயதிலிருந்து உழைத்து, விளையாடி, சிலம்பாடி, கராத்தே போன்றவை கற்றுக் கொண்டு வலுவாக இவளின் மனம் நிறைய "நம்பிக்கையின் துணிச்சலாக" இருந்தாள். எவ்வவு பெரிய "நம்பிக்கைத் துரோகம்! அப்பா அடிக்கடி சொல்வார் பாவங்களிலேயே மிகப் பெரியபாவம் நம்பிக்கைத் துரோகம் தான்" (தோ.நா.ப.8) என்கிறார்.

**கல்வி கற்பதற்கு தடை**

கல்விதான் ஒருவரை வாழ்க்கையில் உயர்த்தும். பொருளாதாரம், குடும்பநிலை போன்ற பல்வேறு காரணங்களால் கல்வி வாய்ப்பு அனைவருக்கும் கிடைப்பதில்லை. இதனை திருவள்ளுவர்,

**விலங்கொடு மக்கள் அனைவர் இலங்குநூல்**

**கற்றாரோடு ஏனை யவர்** (குறள் - 410)

கல்வி அறிவு இல்லாத ஒருவன், மிருகம் போல்தான் செயல்படுவான் என்ற குறள் மூலம் அறியலாம்.

பரிமளாவின் மாமா "பொட்டப் புள்ள வண்ணான் கணக்கு எழுதன அளவுக்குப் படிச்சாப் பத்தாதா? அதான் அஞ்சாங் கிளாஸ் பாஸ் பண்ணிருச்சுல்ல. படிப்ப நிறுத்திருக்கா. அப்புறம் லவ் லட்டர் எழுதுறது அது, இது போய் முடியும் சொல்லிப்புட்டேன்" (தோ.நா.ப. 9) என்று கூறினார்.

இப்படி பல் இன்னல்களைத் தாண்டி பரிமளா வின் வாழ்க்கையில் ஒரு பெண் கல்வி கற்றால் அக்குடும்பமே சிறப்பாக இருக்கும் என்பதற்கு அடையாளமாக பரிமளாவை காணமுடிகிறது.

**உதவி செய்யும் மனப்பான்மை**

உதவி செய்யற மனப்பான்மை எல்லோருக்கும் இருக்காது. பிறருக்கு உதவுதல் என்பது மிகச்சிறந்த ஒரு பண்பு, உதவுவதன் மூலம் நம் உடல், மனம் இரண்டும் நன்மை பெறுகின்றன. அதைப்போல பரிமளா அவள் வீட்டிலிருந்து பள்ளிக்கூடத்திற்கு செல்லும் வழியில் 'லீலா' ஆசிரியர் வீடு இருக்கிறது. லீலா டிச்சர் தண்ணீர் சுமந்து கொண்டு வருவது பரிமளா வால் தாங்க முடியவில்லை. டிச்சரிடம் இருந்த தண்ணீர் குடத்தை வாங்கி வீட்டில் வைத்தாள். பரிமளா டிச்சர் வீட்டுக்கு சென்று தன்னால் முடிந்த வேலைகளை செய்தாள். பரிமளா "ஏன் டிச்சர், மேல்வேலைக்கு ஒரு ஆள் போட்டுக்கக் கூடாதா?" (தோ.நா.ப. 10) என்று கேட்டாள்,

லீலா ஆசிரியரின் கணவர் உடன் பிறந்தவர்கள் நான்கு பெண்கள். அவர்களுக்கு திருமணம் செய்து வைத்ததால் கடன் ஆகிவிட்டது. அதனால் வாங்கும் சம்பளம் கடனுக்கு சரியா போகிறது என்று கூறினாள். அன்றிலிருந்து தினமும் காலை எட்டு மணிக்கு டிச்சர் வீட்டுக்கு வந்து ஆடை கசங்காமல், வேலை செய்வாள். எது சாப்பிட கொடுத்தால் பரி "வயிறு ரொம்மிடுச்சு" கூறுவாள். பரிமளா லீலா டிச்சரின் வேலைகளை பகிர்ந்து கொள்ளுவது அவளுக்கு அளவில்லா மகிழ்ச்சியும், மனநிறைவும் தந்தது. படிக்கிற புள்ள இல்ல. அதான் ஒரு உதவி செஞ்சா இப்படித் திருப்பிச் சொல்லுது "(தோ.நா.ப.12) நன்றி என்று பரிமளா கூறுவாள்.

பரிமளாவின் உதவி இப்படி மாணவர், டிச்சர், அம்மா, மற்றவர்கள் என்று உதவிச் செய்யும் மனப்பான்மை வளர்ந்து கொண்டே செல்லுவது போற்றுதற்குரியதுயாகும்.

**திட்டமிடுதல்**

திட்டமிடுதல் என்பது ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைய எடுக்க வேண்டி நடவடிக்கைகளை முன்கூட்டியே திட்டமிடுவதாகும்.

பரிமளா அப்பாயோடு சொந்தம் என்று சின்னம்மா, பூவாயி வீட்டு வந்தனர்கள்.

"பரி தான் படிப்பு முடிச்சிடுச்சே! ஒரு வாரம் எங்க கூட இருந்துட்டு வரட்டும்" (தோ.நா.ப.14) என்று சின்னம்மா கூறினாள்.

பரிமளாவை காளியப்பனுக்கு திருமணம் செய்து விட்டு "சொத்தை" கை மாறிக் கொள்ளலாம் என்று பூவாயி திட்டம் தீட்டினாள். இதனை அறிந்த பரிமளா "தலையில் சம்மட்டி கொண்டு அடித்தது போல்" இருந்தது. பூவாயி மீண்டும் "நம்மளோட திட்டம்"லாம் நிறைவேறிய பிறகு கௌதம்மை 'தேவை'ன்னா முடிச்சிரலாம்" என்று கூறினாள்.

பரிமளா "குதிரை கீழ தள்ளுனதும் இல்லாம குழியும் பறிச்சிச்சாப்"ங்கற கதைப்போல இருக்கது என்றாள். பரிமளா மீது அன்பு வைத்ததைத் தவிர வேறு பாவம் அறியாதவன் கௌதம். நம்மால் கௌதம்க்கு எந்த பிரச்சனை வரக்கூடாது என்று இறைவனை வேண்டினாள்.

**திறமை**

சிறந்த திறனை "திறமை" என்று கருதலாம். திறமை என்பதற்கு தமிழில் புலமை, இயல் திறன், திறன் என்று பொருள்யாகும். பரிமளா பெண்டிங்க் பள்ளியில் ஐந்து குழுக்களாக பிரிந்து எல்லா பாடங்களையும் குழந்தை களுக்கு கறுகு கொடுக்குவாள். வகுப்பறையை திருவிழா மாதிரி காட்சியளிக்கும்.

மாலையில் வீட்டுக்கு போகும்போது பரிமளாவை யும், பள்ளிக்கூடத்தையும் விட்டு பிரிய மனமில்லாமல் போகுவதை மனநிறையோடு பார்த்து அந்த அழகை ரசிப்பாள் பரிமளா.

ஒரு நாள் பரிமளாவிடம் "டிச்சர் இந்த வகுப்பு வரலாறு வகுப்பு. வரலாறு டிச்சர் வரல நீங்க வாங்க டிச்சர்" என்று அழைத்தார்கள்.

பரிமளா 'பாடம்'லாம் முடிச்சிட்டேனே!' என்று கூறினாள். "இங்லீஸ் கிராமர் டிச்சர்" என்று மாணவர்கள் கேட்டனர். விமா டிச்சர், "ஆமாம் டிச்சர் பரி டிச்சர் கிராமர் எடுத்தா, டிராமா பாத்த மாதிரி இருக்கும் என்றார்கள்.

பரிமளாவிற்கு உரிய பானையில் "இங்லீஸ் கிராமரத் தமிழ்'ல் படிச்சோம்" எளிமையாக புரியும். "மொதல்ல தெரிஞ்சுக்குவோம், புரிஞ்சுக் குவோம் அப்புறம் பயன் படுத்துறப்போ, இங்கிலிஸ் பின்னிடுவோம்!" (தோ.நா.ப.47) என்று பரிமளா பன்முகப் பார்வையில் அந்த பள்ளிக்கூடத்தை வலம் வந்தாள் என்பதை அறிய முடிகிறது.

**அன்பாக குடுத்தல்**

அன்பு என்பது ஊற்றுப்போல் தானாக வெளிப்படும் உணர்வு எல்லா மதங்களும் அன்பையே வலியுறுத்துகின்றன. 'அன்பே சிவம்' என்கிறது சைவ மதமும், 'இறைவன் அன்பாக இருக்கிறார்' என்று கிறித்துவ மதமும் பௌத்தம் "எல்லோரும் அன்பால் சகோதரத் துவம்" என்று வலியுறுத்துகிறது.

இதனை வள்ளுவர்,

**"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
**புன்கணீர் பூசல் தரும்"** (குறள் - 77)

அன்புடையவரின் சிறு கண்ணீரே அவர் அன்பினைப் பலர் அறிய வெளிப்படுத்தி விடும் என்று திருக்குறள் அன்பின் சிறப்பினை வெளிப்படுத்துகிறது.

மிஸ் எட்வின் அவர்கள் ஓர் ஆசிரியர் ஒரு வருசத்துல ஒரு டிச்சர் எவ்வளவு செய்ய முடியும், எவ்வளவு உருவாக்க முடியும், எவ்வளவு சாதிக்க முடியும்"னு என்பதை அறிய முடிகிறது.

பரிமளா வகுப்பறையில் உள்ள அனைத்து மாணவர் களிடம் அன்பாக இருந்துள்ளதை அறியமுடிகிறது.

**அறிவுரை வழங்குதல்**

ஒருவருக்கு நன்மை பயக்கும் வகையில் அளிக்கப்படும் கருத்து, ஆலோசனை, புத்திமதி, கூறுவது யாகும். பரிமளா தன்னுடைய வகுப்பு மாணவிகளுக்கு "நீக்க எல்லாரும் எவ்வளவு கெட்டிக்காரங்க"ன்னு தெரியும். பெண்டிங்க் பள்ளி மாணவிகளின் அறிவும், திறமையும் சென்னை முழுவதும் தெரியும். உங்களில் பலபேர் பொறியியலாளர்களாகவும், மருத்துவர் களாகவும், பல்துறை நிபுணர்களாகவும் உருவாகலாம். நீங்கள் பெரியதொழில் அதிபராக பொறுப்பு ஏற்கும் போது ஏழை, எளிய, நடுத்தர வர்க்க மக்கள் அனைவருக்கும் உதவி செய்ய வேண்டும். அவர்களுக்கு சுமை இல்லாம பணியாற்றனும் என்பதை இந்த பரிமளா டிச்சரோடு ஆசை. அதனை நீங்கள் நிறைவேற்றனும் என்று எனக்கு தெரியும் என்பதை வலியுறுத்தி கூறினாள்.

"நீங்க நிறைய பொருளீட்டனும், எல்லா நுகர்வுகளும் பெற்று மகிழணும், அதேசமயம் மற்றவர்களின் நிறைவேறாத தேவைகள் உங்க கண்கள் உறுத்தணும், முடிந்தவரை அவற்றை நிறைவேற்றவும், உழைக்கணும். இயற்கைத் தாய் உங்களோட இருப்பாங்க" (தோ.நா.ப. ) என்று மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினாள் பரிமளா.

**கௌதமின் பண்பு நலன்கள்**

பெண்ணுரிமைக்கு குரல் கொடுத்தல், ஏக்கம், சுயதொழில், புகழ்தல் போன்ற பண்பு நலன் ஆகும்.

**பெண்ணுரிமைக்கு குரல் கொடுத்தல்**

பெண்களுக்கு ஏதாவது பிரச்சனையோ, தடையோ ஏற்பட்டால் பெண்களுக்காக ஆண்கள் காப்பாற்ற வருவதேயாகும். அதைப்போல கௌதம் பரிமளாவிற்கு ஐந்தாம் வகுப்பு முடிந்து 'மாமா' எதிர்ப்பு தெரிவிக்கிறார். இதனை அறிந்த கௌதம் பரிமளாவின் அப்பாவிடம் சென்று பரிமளா "பள்ளிக்கூடத்திலேயே முதல் மாணவி பரி" என்று கூறினாள் பரிமளாவை படிக்க அனுப்பவில்லை என்றால் "உங்க தொழிற்சங்க வாசல்ல" வந்து "தர்ணா" பண்ணுவோம் என்று அபிநயம் காட்டி சொன்னான் கௌதம்.

பரிமளாவின் அப்பா கௌதமை அலாக்காகத் தூக்கிக் கொஞ்ச ஆரம்பித்துவிட்டார். கௌதமை "பெண்ணுரிமைக்கு குரல் கொடுத்த என் சிங்கமே!" (தோ.நா.ப. 13) என்று பாராட்டினார்.

**ஏக்கம்**

ஏக்கம் என்பது விரும்பிறது கிடைக்காத துக்கம், நிறைவேறாத ஆசை, ஆகியவை குறிப்பிடலாம். கௌதம் பரிமளா மீது அளவுக்கு அதிகமாக ஆசையை வைத்துள்ளன், கௌதம்மை எங்கு பார்த்தாலும் சண்டை போடுவாள். பள்ளிக் கூடத்தில் மற்ற மாணவர்கள் இடத்தில் நல்லாப் பேசுவாள். தன்னிடம் நல்ல பேச மாட்டாளோ என்ற ஏக்கம் கௌதமிடம் ஏற்பட்டது.

பரிமளாவின் அப்பாவிடம் “ஏன் மாமா, ஒரு சராசரிப் புள்ளய நீங்க பெத்துருக்கூடாதா?” என்று கேட்டான். அதற்கு பரிமளாவின் அப்பா “சராசரிப் பிள்ளையா இருந்தா நீ திரும்பிப் பார்த்திருப்பியாடா” என்று பொடுது “அதுவும் சரிதான்” என்று கூறினாள்.

இவ்வாறு பரிமளா தன்னிடம் எப்படியாவது அன்பாக பேசுவாளோ என்ற ஏக்கம் கௌதமிடம் காணப்பட்டது. பரிமளா மனதில் எப்படியாவது இடம் பிடிக்க வேண்டும் என்ற கொள்கையோடு இருந்தான்.

பரிமளா “எனக்கு எல்லாமே நீ தான்’டா எப்பவும் எனக்கு நீ வேணும்!” என்று கூறும்போது முத்தமிட்டாள். அவனுக்கு பிரமை பிடித்தவன் போல் இருந்தான். அவனுக்கு வியப்பு, மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை.

கௌதம் பரிமளாவின் மேல் வைத்து இருந்த அன்பு உண்மையானது. அவனின் ஏக்கத்திற்கு கிடைத்த பரிசு பரிமளா. தன் வாழ்க்கையில் ‘பரிமளாவை’ பொக்கிஷ்ம் போல பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் அவன் உள்ளிருந்து தோன்றுவதை அறிய முடிகிறது.

**சுயத்தொழில்**

சுயத்தொழில் என்பது தனிநபர்கள் தங்களுக்காக வேலை செய்யும் ஒரு வாழ்க்கை பாதையாகும். பரிமளா கலிபோர்னியாவில் “இந்திய தமிழன் பலசரக்கு கடை” என்று ஆரம்பிக்கலாம் என்று கூறினாள். அதற்கு வில்லியம் எனக்கு ஆசை தான் ஆனா அதுக்குப் பொருள் பரிமாற்றத்துக் கும் உதவிக்கு இந்தியாவுல நம்பகமான, திறமையான ஆள் வேணுமே!” என்கிறார் வில்லியம். பரிமளா, கௌதம்க்கு உடம்பெல் லாம் வியாபார மூளை இருக்கிறது. சின்ன வயதிலிருந்து வியாபாரக் கனவோடும், கடினமாக உழைப்பும், திறமையும், கௌதமிடம் இருக்கின்றது என்று பரிமளா கூறினாள். மேற்கண்டவாறு நால்வரும் இணைந்து சுயத் தொழில் செய்லாம் என்பதை அறியமுடிகிறது.

**புகழ்**

ஒரு நாள் பிரிசி. கௌதம் - பரிமளாவையும் புது வீட்டில் பார்க்க வந்தாள். வீடு அழகாக இருக்கிறது “எல்லாம் கௌதமுடைய வரைவு தான் அவனோட ரசனை!” என்றாள் பரிமளா. பிரிசி “அவனோட ரசனைக்கு என்ன கொறச்சலா? நல்லவன், வல்லவன், அழகனாக் கும் என் கௌதம்!” என்று புகழ்தல் பரிமளா.

பிரிசி இடம் சாமானியன் ஞானியவிட எந்த விதத்துலக் கொறஞ்சவன் இல்லை என்று பரிமளா கூறினாள். பரிமளாவும், பிரிசிவும் கௌதமை புகழ்வது சிறப்புக்குரியது யாகும்.

**முடிவுரை**

‘தோட்டம்’ நாவலில் முதன்மை மாந்தர்களாக பரிமளா, கௌதம் இடம்பெறுகின்றன. வகுப்பு தோழர்களாக அறிமுகமாகி திருமண வாழ்க்கையில் இணைகின்றனர். உள் ஊரில் சுயத்தொழில் ஆரம்பித்து கலிப்போர்னியா வரை ஏற்றுமதி செய்து அதில் வரும் வருமானத்தை டிரஸ்ட் அமைத்து தன்னைச்சுற்றி உள்ளவர்களுக்கும், சமுதாயத்திற்கும் தொண்டு செய்ய கூடிய தலைமை பாத்திரமாக அமைகின்றனர் என்பதை அறியமுடிகிறது.

**துணை நூற்பட்டியல்**

1. மு.வ. நாவல்களில் பாத்திரங்கள் ஓர் திறனாய்வு பா. சம்பத்குமார்
2. ராஜம்கிருஷ்;ணன் புதினங்களில் பெண்மாந்தர் ஓர் ஆய்வு ஹரி. விஜயலட்சுமி
3. விந்தன் நாவல்கள் ஓர் ஆய்வு, மு. பரமசிவலம்
4. தோட்டம் நாவல், முனைவர் சேதுமணி மணியன்
5. அற இலக்கியக் களஞ்சியம், க.ப.அறவாணன்